செ.வெ.எண்: 518/2016 நாள்: 11.08.2016

# <u>பத்திரிகை செய்தி</u>

**<u>கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் சுதந்திர தினமான 15.08.2016 அன்று கிராமசபைக் கூட்டம் - மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான், இ.ஆ.ப., அவர்கள் தகவல்.</u>**

--------------

இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளதாவது, சுதந்திர தினமான 15.08.2016 அன்று அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டத்தினை ஊராட்சிகளின் எல்லைக்குட்பட்ட வார்டுகளில் சுழற்சி முறையில் காலை 11.00 மணி அளவில் நடத்திடவும் அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு குறைவெண்வரம்பின் படி உறுப்பினர்களின் வருகை இருப்பதை உறுதி செய்து கிராம சபைக் கூட்டம் நடத்திடவும் தமிழக அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 9 ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 95 கிராம ஊராட்சிகளிலும் 15.08.2016 திங்களன்று காலை 11.00 மணியளவில் கிராமசபைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கிராம சபைக் கூட்டத்தில் **வறுமை ஒழிப்பு திட்டம் உட்பட அனைத்து துறைகளிலும் மேற்கொள்ளப்படும் திட்டங்களினால் தனிநபர் மற்றும் சமுதாயத்தின் ஒவ்வொருவரும் பயன்பெறும் தன்மையினை எடுத்துரைத்தல்** மற்றும் அனைத்து துறைகளிலும் மேற்கொள்ளப்படும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்தும் விவாதிக்கப்படவுள்ளது.

மேலும், அரசால் பல்வேறு துறைகளின் மூலம் செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்து பொது மக்களிடம் எடுத்துரைக்கவும், பொது மக்களுக்குத் தேவையான விவரங்களை அளித்திடவும் அனைத்துத் துறைகளின் அலுவலர்களும் இக்கிராம சபைக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

எனவே, அந்தந்த ஊராட்சி மன்றத் தலைவர்கள் பங்கேற்று சிறப்பாக நடத்தவுள்ள இக்கிராமசபைக் கூட்டத்தில் கிராம ஊராட்சிப் பகுதிகளுக்குட்பட்ட பொதுமக்கள் அனைவரும் அந்தந்த பகுதிகளில் நடைபெறவுள்ள கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெற மாவட்ட ஆட்சித் தலைவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.